
# உடன்பிறப்பே... 67

**நீரை.மகேந்திரன்**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த சொ.காவேரிமணியம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

ஓவியம் : ரவி பேலட்



# “எளிமையான வாழ்க்கை, எஃகு உள்ளம்” சொ.காவேரிமணியம்

**1963**-ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இந்தித் திணிப்புக்கு எதிராக அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைத் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்தின் அறிவிப்பை வெளியிட்டார் பேரறிஞர் அண்ணா. மாவட்டம்தோறும் களம் காணும் வீரர்களின் பட்டியலையும் வெளியிட்டார். அலை அலையாகக் கலந்து கொண்ட மொழிப்போர் மறவர்களில், 01.01.64 முதல் 12.01.64 வரை மதுரையில் பெயர் அளித்திருந்தவர் சொ.காவேரிமணியம் பி.ஏ.பி.எல். தமிழ்நாடு முழுவதும் பற்றிப் படர்ந்த போராட்டத்தில், சென்னையில் அண்ணா, கரூரில் கலைஞர் என முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

நாவலர் கைது செய்யப்பட்டு, மதுரைச் சிறைக்குக் கொண்டுவரப்பட்டார். அவருடன் சேர்ந்து சிறையில் அடைக்கப்பட்டவர்களில் ஒருவர் மதுரையில் கழகம் வளர்த்த முன்னோடி காவேரிமணியம். அவர்கள் வைக்கப்பட்டிருந்த அறை, சிறைக்குள்ளேயே இருக்கும், மற்றொரு குட்டிச் சிறை. அதாவது, காற்றுக்கும் வழியில்லாத கொட்டடி. அங்கு அடைக்கப்பட்டவர்கள் இரண்டு நாட்களில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அந்த வழக்கில், போராட்டத் தடை உத்தரவில், போலீசார் கையெழுத்து வாங்கவில்லை என நீதிமன்றத்தில் வாதிட்டு, விடுதலை வாங்கியவர் காவேரிமணியம். அவரே வழக்கறிஞர் என்பதால், நீதிமன்றத்தையும் போராட்ட மன்றமாக்கினார் என்கிறது வரலாறு. அப்படியான காவேரிமணியம், அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் அன்பைப் பெற்ற உடன்பிறப்பாக விளங்கியவர். மதுரை மாவட்டத்தில், கழகம் வளர்த்த கழக வழக்கறிஞர் என்பதும் அவரது அடையாளங்களில் ஒன்று.

மதுரை மாநகரை ஒட்டியுள்ள அவனியாபுரத்தில் சொக்கலிங்கம் - வெள்ளையம்மாள் ஆகியோருக்கு 1929-ஆம் ஆண்டில் பிறந்தவர் காவேரிமணியம். கல்வியில் காட்டிய ஆர்வத்தினால், சட்டம் பயின்று வழக்கறிஞராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர், இளைஞராக இருந்த காலத்தில் இருந்தே கழகப் பணிகளில் இணைத்துக் கொண்டு, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பணியாற்றியவர்.

### சிறைச்சாலை, பூஞ்சோலை!

1957-ஆம் ஆண்டு முதல், கழகத் தலைமையால் அறிவிக்கப்பட்ட அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று ‘மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக’ சிறைச்சாலையை எண்ணி சிறைபுகுந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர். விலைவாசி உயர்வுப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம், ஈழத்தமிழர் உரிமைப் போராட்டங்கள் எனப் பல போராட்டங்களில், மதுரையில் கழகத்தின் முன்னணித் தொண்டராகக் கலந்துகொண்டு சிறை கண்டவர். நெருக்கடி நிலை காலத்தில் ஓராண்டுக் காலம் கைதியாக இருந்தவர். கழகத்தைக் கடைசி வரை விட்டுக்கொடுக்காமல் உறுதியுடன் சிறை மீண்டவர். களம் கண்டு சிறை சென்றாலும், மக்கள் பணிகளைத் தொய்வில்லாமல் நடத்துவதில் வல்லவர் எனப் பெயர் எடுத்தவர்.

அவனியாபுரம் பேரூராட்சித் தலைவர், மாவட்ட நூலக ஆய்வுக் குழுத் தலைவர், மதுரை தெற்கு வட்டக் கழகத்தின் செயலாளராக பத்து ஆண்டுக் காலம், மதுரை மாவட்டக் கழகச் செயலாளராக 12 ஆண்டுகள், மாநகரச் செயலாளராகவும் சில ஆண்டுகள் என சிறப்பாகப் பணியாற்றியவர். தலைமைக் கழகத் தீர்மானக்குழுத் தலைவராகவும், உயர்நிலைச் செயல் திட்டக் குழு உறுப்பினராகவும், மதுரை வடக்கு மாவட்டத் தொழிற்சங்கத் தலைவராகவும் திறம்படப் பணியாற்றி, கழகத்தின் கட்டுக்கோப்பினைக் காத்தவர். 1971- ஆம் ஆண்டில் திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்குப் பல திட்டங்களைக் கொண்டு சேர்த்தவர் காவேரிமணியம்.

### தீர்மான விளக்கக் கூட்டங்கள்

1972-ஆம் ஆண்டு கழகத்துக்கு எம்.ஜி.ஆரால் நெருக்கடி வந்தபோது, மதுரையிலும் அது கடுமையாக எதிரொலித்தது. மாணவர்கள் மத்தியில் குழப்பங்களை உருவாக்கி இருந்தனர் சிலர். அந்த நெருக்கடிகளை மடைமாற்றி, மதுரையை கழகத்தின் கோட்டையாகக் காப்பாற்றியவர்களில் காவேரிமணியம் முன்நின்றார். **‘அண்ணாவின் மாற்றுருவே தி.மு.க’, ‘இயக்கமே நமக்கு தாய் தந்தை வீடு’** என தலைமைக் கழகத்தின் பொதுக்குழு முடிவினை தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேர்த்தனர் கழக விசுவாசிகள். மதுரை, தேனி, திண்டுக்கல், பழனி உள்ளிட்ட பகுதிகளில் பொதுக்குழுத் தீர்மான விளக்கக் கூட்டங்கள் நடத்தி பம்பரமாகச் சுற்றிச் சுழன்றவர்.

கழகத்தில் இளைஞர்களுக்கென ஓர் அமைப்பு தேவையெனக் கருதிய தலைவர் கலைஞர், இளைஞர் அணி என்னும் அமைப்பினை உருவாக்கினார். 1980-ஆம் ஆண்டில், அதன் தொடக்க விழா, மதுரை மூதூரில் உள்ள ஜான்சிராணி பூங்கா திடலில் நடைபெற்றது. அதை வெற்றிவிழாவாக மாற்றியவர்கள், அமைப்புச் செயலாளர் தென்னரசு, பி.டி.ஆர்.பழனிவேல்ராசன், வே.தங்கபாண்டியன், காவேரிமணியம் என மூத்த முன்னோடிக் கழகத்தினர் என்றும் குறிப்பிடுவர். இப்படி இளைஞர்களுக்கு வழிவிடவும், தனது இறுதி மூச்சு வரை தி.மு.கழகத்திற்கும், கட்சித் தலைமைக்கும் விசுவாசியாக வாழ்ந்து பலரை வளர்த்த மூத்த தலைவராக காவேரிமணியம் இருந்தார்.

கழகத்தில் அவரது பெரும்பணியைப் பாராட்டும்விதமாக, 1996-ஆம் ஆண்டில்,

> **“எந்த நிலையிலும் கொள்கை உறுதியில் சிறிதும் குலையாமல்; அழுத்தம் திருத்தமாக அரசியல் செயல்பாடுகளை அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிவந்த அரிமா அவர்.**

கழகத்தின் முப்பெரும் விழா விருதுகளில், அண்ணா பெயரிலான விருதினை தலைவர் கலைஞர் தனது கரங்களால் அளித்து காவேரிமணியத்தைக் கௌரவித்தார்.

2006-ஆம் ஆண்டு, மார்ச் 22 அன்று எதிர்பாராதவிதமாக காவேரிமணியம் இயற்கை எய்தியபோது, தனது இனிய நண்பரை இழந்த துயரம் என கலைஞர் இரங்கல் எழுதினார்.

“எந்த நிலையிலும் கொள்கை உறுதியில் சிறிதும் குலையாமல்; அழுத்தம் திருத்தமாக அரசியல் செயல்பாடுகளை அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிவந்த அரிமா அவர். எளிமையான வாழ்க்கை. எஃகு உள்ளம் - என்றைக்கும் எங்களோடு ஒருவராக இருந்து இயக்கம் வளர்த்த இனிய உடன்பிறப்பு” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்திருந்தார்.

கழகத்தின் கடும் சோதனைக் காலங்களில் கலைஞர் அவர்களோடு பயணித்த, அந்த எஃகு உள்ளத்துக்கு நாம் செலுத்தும் மரியாதை, கலைஞர் சொன்னதுபோல் அழுத்தம் திருத்தமாகக் கழக அரசியல் செயல்பாடுகளை அமைத்துக் கொள்வதுதான்..

...துடிக்கும்

## மைனாரிட்டி பா.ஜ.க.வின் ஒப்பாரி!

ஒன்றியத்தில் அமைந்திருக்கும் கூட்டணி பா.ஜ.க. அரசு நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் முட்டாள்தனமான விஷயங்களைச் செய்து, மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்து வருகிறது. அதன் சமீபத்திய உதாரணம், ‘இனி ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 25-ஆம் தேதியை ‘அரசியலமைப்பு கொல்லப்பட்ட நாள்’ என கடைப்பிடிக்க வேண்டும்’ என்ற அறிவிப்பு.

ஏன் ஜூன் 25? 1975-ஆம் ஆண்டு அந்தத் தேதியில்தான் நெருக்கடி நிலையை அறிவித்தார், அன்றைய பிரதமர் இந்திரா காந்தி. அதற்கு எதிராக முதன்முதலில் குரல் கொடுத்தது, திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்திய அரசியல் வரலாற்றில், ‘நெருக்கடி நிலை’ என்பது நிச்சயமாகக் கருப்புப் பக்கம்தான். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், கடந்த கால காயங்களை மறந்துவிட்டு, ஜனநாயகம் தழைக்கப் பாடுபட வேண்டும் என்பதுதான் காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் குறிக்கோள். மீண்டும் அப்படி ஒரு அசம்பாவிதம் நடந்துவிடக் கூடாது என்பதுதான், சாமானியர்களின் அச்சமும்.

நாட்டின் பெரும்பான்மை மக்கள் இவ்வாறு நினைக்க, மைனாரிட்டி பா.ஜ.க. அரசோ ஆறிய காயங்களை மீண்டும் கிளறுகிறது. அதன் வெளிப்படையான சாட்சியம்தான், இந்த அறிவிப்பு. 50 ஆண்டுகளுக்கு முன்பு வந்தது கூட ‘அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலை’தான். ஆனால், இன்றோ தனது வெறுப்புப் பிரச்சாரங்கள் மூலம் அறிவிக்கப்படாத நெருக்கடி நிலையை ஏற்படுத்த முயற்சிக்கிறது, பா.ஜ.க.

இந்தியா கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனநாயகத்தைக் காக்க, அரசியலமைப்பின் மீது நம்பிக்கை வைத்து, ‘ஜெய் சம்விதான்’ என்று ஒற்றைக் குரலில் வெறுப்பரசியலுக்கு எதிராக முழங்கினர். அதனைக் கையாளத் தெரியாத, நேரடியாக எதிர்கொள்ளத் திராணியற்ற மைனாரிட்டி பா.ஜ.க. ‘சம்விதான் ஹத்ய திவஸ்’ என்று ஒப்பாரி வைக்கிறது. ஒப்பாரிகள் ஓய்ந்துவிடும். முழக்கங்கள் மேலும் உரத்துக் கேட்கும்!

## ஃப்ளாஷ்பேக்



பி.பன்னீர்செல்வம்



### தலைவருடன் ஊழியர்!

**1996**-ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் நடைபெற்ற இளைஞர் அணி நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்திருந்தார். அன்றைய விருதுநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.பி.ராஜன் அவர்கள் இளைஞர் அணி ஊழியர் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். சாத்தூர் நகரப் பொறுப்புக் குழு உறுப்பினராக இருந்த நான், கழகத் தலைவர் தளபதி அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டேன்..

**- பி.பன்னீர்செல்வம்,**
**சாத்தூர், விருதுநகர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### அண்ணாவும் இளையவரும்...

1938-ஆம் ஆண்டு ஜூன் 3 அன்று, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டக் கொடி சென்னையில் ஏற்றப்பட்டு, போராட்டம் தொடர்ந்து நடந்தபோது, அதன் படைத்தளபதிகளாகப் பொறுப்பேற்றவர்களில் பேரறிஞர் அண்ணாவும் ஒருவர். அண்ணா தனது 30-வது வயதில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, தந்தை பெரியாரின் ஆணையை ஏற்று சிறை சென்றபோது, அவரை விட ,16 வயது இளையவரான முத்தமிழறிஞர் கலைஞர், அதே நேரத்தில் திருவாரூர் வீதிகளில் இந்தித் திணிப்பு எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்திக் கொண்டிருந்தார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

544

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131